# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 20 செவ்வாய்க்கிழமை 03.06.2025 கதிர் 214



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




## தாய்க் கட்சி என்பவர்கள் விட்டுக்கொடுப்புக்குத் தயாரில்லை!



### தமிழரசைக் கடுமையாகச் சாடிய சங்கின் செயலாளர்

வவுனியா, ஜூன் 3

"பெரிய தாய்க் கட்சி என்று சொல்லிக்கொள்கின்ற ஒரு கட்சி ஒரு சில இடங்களிலாவது ஏனையோருக்கு விட்டுக்கொடுக்கும் மனநிலைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், அது நடைபெறவில்லை." - என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் (சங்கு) செயலாளர் நாகலிங்கம் இரட்ணலிங்கம் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுடனான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சி ஒன்று தமிழர்களுடைய நிர்வாகத்தை 7

# பிரதமர் ஹறிணியை மாற்றும் நோக்கம் அரசுக்கு இல்லை!

### அமைச்சர் நளிந்த அறிவிப்பு





கொழும்பு, ஜூன் 3

"மக்களின் அமோக ஆணையால் உருவாக்கப்பட்ட இந்த அரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக எதிராளிகளால் திட்டமிட்டுப் போலிச் செய்திகள் பரப்பப்படுகின்றன. ஆனால், அந்தச் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை. அதேவேளை, பிரதமர் ஹறிணியை மாற்றும் எண்ணமும் இல்லை." - என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில், 7

## அநுரவுக்கு டக்ளஸ் அவசர கடிதம்



யாழ்ப்பாணம், ஜூன் 3

வடக்கு, கிழக்கு கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் எமது கடல் வளத்தையும் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துப் பேரழிவைத் தடுக்குமாறு கோரி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் 7

## கட்டிய மனைவியின் தலையுடன் பொலிஸில் சரணடைந்த கணவன்

### வவுனியாவில் கொடூரம்



வவுனியா, ஜூன் 3

தனது மனைவியை வெட்டிப் படுகொலை செய்தார் எனச் சந்தேகிக்கப்படும் கணவன் மனைவியின் தலையுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். 7

## சுற்றாடல் அதிகார சபையினரின் ஏற்பாட்டில் யாழ். பண்ணையைச் சுத்தப்படுத்தும் நிகழ்வு







யாழ்ப்பாணம், ஜூன் 3

யாழ்ப்பாணம், பண்ணைக் கடற்கரையைச் சுத்தப்படுத்தும் நிகழ்வு யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் இன்று நடைபெற்றது.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பிளாஸ்டிக் மூலம் ஏற்படும் மாசை இல்லாது ஒழிப்போம் எனும் 2025 ஆம் ஆண்டுக்கான 7

# வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மனுக்கு தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு








முல்லைத்தீவு, ஜூன் .03

முல்லைத்தீவு மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது. இந்த பொங்கல் உட்சவத்திற்கு முன்னர் முதல் திங்கள் பாக்குத் தெண்டல் இரண்டாவது திங்கள் உப்பு நீரில் விளக்கெரியும் அதிசயமான நிகழ்வுக்காக அம்மனுக்கு தீர்த்தம் எடுக்கும் நிகழ்வும் இறுதி மூன்றாவது திங்கள் வைகாசிப் பொங்கல் விழாவும் இடம்பெறும். இந்த சடங்கு முறையில் இரண்டாவது திங்கள் கிழமையான நேற்றைய நாளில் தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

காட்டு விநாயகர் ஆலயத்தில் நேற்று மாலை இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளை தொடர்ந்து தீர்த்தக்குடம் பாரம்பரிய வழிகள் ஊடாக முல்லைத்தீவு தீர்த்தக்கரைக்கு எடுத்து செல்லப்படும்.

தொடர்ந்து, முல்லைத்தீவு பெருங்கடலில் தீர்த்தம் எடுக்கப்பட்டு மீண்டும் பாரம்பரிய வழிகள் ஊடாக காட்டுவிநாயகர் ஆலயத்தை சென்றடைந்து அங்கு உப்புநீரில் விளக்கெரியும் அற்புதம் இடம்பெறும்.

மேலும், எதிர்வரும் 08ஆம் திகதி அன்று காட்டுவிநாயகர் ஆலய பொங்கல் விழா இடம்பெற்று, 09ஆம் திகதி திங்கள் வைகாசி பொங்கல் விழா சிறப்பாக நடைபெறவுள்ளது. (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# “நல்லாட்சியில் ஏன் மஹிந்தானந்தாவை விசாரிக்கவில்லை”

கொழும்பு, ஜூன் .03

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தொடர்பான வழக்கு தனது காலத்தில் ஏன் விசாரிக்கப்படவில்லை என்பது குறித்து நல்லாட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விளக்கமளிக்க வேண்டும் என்று கடுமையான மோசடி, ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம், அரச வளங்கள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான விசாரணை மற்றும் விசாரணைக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் (PRECIFAC) முன்னாள் செயலாளர் லெசில் டி சில்வா திங்கட்கிழமை (02) அன்று தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தொடர்பான வழக்கு தனது காலத்தில் விசாரிக்கப்படாததற்கு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் கூறப்பட்டுள்ளது.



பத்மன் சூரசேன, அமேந்திர செனவிரட்ன, விக்கும் களுஆராச்சி, கிஹான் குலதுங்க மற்றும் முன்னாள் கணக்காய்வாளர் பி.ஏ.பிரேமதிலக்க ஆகிய நான்கு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இதில் அடங்குவர்.

ஒரு தசாப்தத்திற்கும் மேலாக பாராளுமன்ற நிர்வாக இயக்குநராகப் பணியாற்றிய சிவில் சமூக ஆர்வலர் டி சில்வா, இந்த மோசடி நடந்த நேரத்தில் சதோசா தலைவர் அளுத்கமகே மற்றும் நலின் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பரிந்துரைத்ததாக தெரிவித்தார்.

சதோச வழக்கை ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு விசாரித்த நேரத்தில், நளின் பெர்னாண்டோ பாராளுமன்ற அரசியலில் நுழையவில்லை, விசாரணைகள் ஏன் வெற்றிகரமாக முடிவுக்கு வர முடியவில்லை என்பதைக் கண்டறிய அரசாங்கத்தை வலியுறுத்தினார் என்று டி சில்வா சுட்டிக்காட்டினார்.

மேலும், கடந்த 2020 பாராளுமன்றத் தேர்தலில் நளின் பெர்னாண்டோ முதன் முதலில் SLPP டிக்கெட்டில் பாராளுமன்றத்தில் நுழைந்தார்.

அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட வழக்குகள் தொடர்பான விசாரணைகளைத் தொடர யஹாபாலன நிர்வாகத்திற்கு அரசியல் விருப்பம் இல்லை. நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு (FCID) ஏப்ரல் 2018இல் பெர்னாண்டோவைக் கைது செய்தது, ஆனால், பின்னர் அவருக்கு பிணை வழங்கப்பட்டது.

அடுத்த ஆண்டு, அக்டோபரில் பயணத் தடை விதிக்கப்பட்டது, ஆனால், டிசெம்பரில் அது நீக்கப்பட்டது.

ஊழல் எதிர்ப்பு நடவடிக்கையை மோசமாகக் கையாண்டது யஹாபாலன அரசாங்கத்தை பலவீனப்படுத்தியதாகக் கூறி டி சில்வா கூறினார்.

மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

அதே நேரத்தில், 53 மில்லியன் ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட உயர் நீதிமன்ற விசாரணை நீதிமன்றத்தால் பெர்னாண்டோவுக்கு 25 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பகிடிவதையால் தற்கொலைக்கு முயன்ற மாணவி! நான்கு மாணவர்கள் பொலிஸாரால் இன்று கைது!!

குருணாகல், ஜூன் 3

குருணாகலில் உள்ள குளியாப்பிட்டி தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் பகிடிவதை காரணமாக உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற சம்பவம் தொடர்பில் நான்கு மாணவர்கள் குளியாப்பிட்டி பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர். குளியாப்பிட்டி தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி கற்கும் நான்கு மாணவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

குளியாப்பிட்டி தொழில்நுட்ப கல்லூரியில் கல்வி கற்கும் மாணவி ஒருவர் நேற்று திங்கட்கிழமை பிற்பகல் கல்லூரிக்கு அருகில் உள்ள வாவியில் குதித்துள்ளார்.

பின்னர் பிரதேசவாசிகள் சிலர் இணைந்து மாணவியைக் காப்பாற்றி குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்த மாணவி, கல்லூரியில் இடம்பெறும் பகிடிவதை காரணமாக தனது உயிரை மாய்த்துக்கொள்ள முயன்று வாவியில் குதித்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. இதனையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் சந்தேகநபர்களான நான்கு மாணவர்களைக் கைதுசெய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கெஹலியவும் அவரது மகனும் இன்று பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, ஜூன் 3

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல ஆகியோரைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல ஆகியோர் இன்று செவ்வாய்க்கிழமை காலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது மகன் ரமித் ரம்புக்வெல ஆகியோர் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

## கொச்சிக்கடை புனித அந்தோனியார் கொடியேற்றம்

கொழும்பு, ஜூன் .03

கொழும்பு-கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தல திருவிழா, கொடியேற்றத்துடன், செவ்வாய்க்கிழமை (03) ஆரம்பமானது.

மும்மொழிகளிலும், காலை 6 மணிக்கு, திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொடியேற்றப்பட்டது. எதிர்வரும் 11ஆம் திகதி வரையிலும் மாலை 6 மணிக்கு நவநாள் வழிபாடுகள் நடைபெறும். 12





ஆம் திகதி இரவு 7 மணிக்கு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் விசேட நற்கருணை ஆராதனையும் நடைபெறும். 13 ஆம் திகதி திருவிழா நடைபெறும். அன்றைய தினம் அதிகாலை 4 மணிக்கு தமிழ் மொழியிலும் காலை 5 மணிக்கு சிங்கள மொழியிலும் மீண்டும் 6 மணிக்கு தமிழ் மொழியில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (ஐ)

## ஜனாதிபதி – ஆஸி. பிரதிப் பிரதமர் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 03

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஆஸ்திரேலியாவின் பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸுக்கும் இடையிலான கலந்துரையாடல் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இலங்கைக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையிலான வரலாற்று உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும், இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை பொருளாதார ரீதியில் நிலையான பயணத்தை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார, ஊழல் மற்றும் மோசடியை ஒழிக்க தற்போதைய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும் ரிச்சர்ட் மார்ல்ஸைத் தெளிவுபடுத்தினார்.

கடந்த காலத்தில் சமுத்திரப் பாதுகாப்பு, சட்டவிரோத வர்த்தகம், ஆள் கடத்தல், பயங்கரவாதம் மற்றும் ஆயுதக் கடத்தலைத் தடுக்கும் செயற்பாடுகளுக்கு ஆஸ்திரேலிய அரசு வழங்கிய உதவிகளை இதன்போது ஜனாதிபதி பாராட்டினார்.

சுற்றுலா, முதலீட்டு நடவடிக்கைகளுக்கு இலங்கை மிகவும் பாதுகாப்பான நாடு என ஜனாதிபதி அநுரகுமார இங்கு சுட்டிக்காட்டினார்.

இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையிலான 70 வருட பொருளாதார மற்றும் வர்த்தகத் தொடர்புகளை நினைவுகூர்ந்த பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சர்ட் மார்லஸ் இலங்கை அரசுடன் நெருக்கமாகச் செயற்படுவதே தமது அரசின் எதிர்பார்ப்பு என்றும் குறிப்பிட்டார்.

இலஞ்சம் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கான இலங்கை அரசின் வேலைத்திட்டத்தை ஆஸ்திரேலிய அரசு பாராட்டுவதாகவும், வர்த்தகம், பொருளாதாரம், அரசியல், சுற்றுலா மற்றும் முதலீட்டுத் தொடர்புகளை வலுப்படுத்துவது, இந்த விஜயத்தின் நோக்கம் என்றும் ரிச்சர்ட் மார்லஸ் இங்கு தெரிவித்தார்.

ஆஸ்திரேலியப் பிரதிப் பிரதமருடன் இலங்கைக்கான ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸ், பாதுகாப்புத் திணைக்களத்தின் செயலாளர் கிரகரி லோரன்ஸ் மொரியாட்டி, பிரதிப் பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் சைமன் எரிக் ஓ’ கொணர், இலங்கைக்கான ஆஸ்திரேலியாவின் பிரதி உயர்ஸ்தானிகர் லலிதா கபூர் ஆகியோரும் இதன்போது இணைந்துகொண்டிருந்ததோடு, இலங்கை அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே உள்ளிட்டவர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

# கருத்துக் கணிப்பு என்ற பெயரில் பொய்யை விதைக்க முயற்சி விஜய்க்கு ஆதரவான சர்வே பற்றி முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்



நடிகர் விஜய், ஜனநாயகன் படப்பிடிப்புக்காக, மதுரை விமான நிலையத்தில் இருந்து கொடைக்கானலுக்கு கடந்த மே 1ம் தேதி சென்றார். மதுரை விமான நிலையத்தில் இருந்து, திறந்தவேனில் நின்றபடி, அவர் பயணித்தார்.

அப்போது, தொண்டர்களும் மக்களும் விஜயை பார்க்க திரண்டனர். வாகனங்களிலும், மரக்கிளைகளிலும் ஏறி நின்று, விஜயை பார்த்தனர். விஜயின், 'ரோடு ஷோ' வீடியோவையும், மதுரையில் கடந்த 31ல், முதல்வர் ஸ்டாலின் நடத்திய 'ரோடு ஷோ'வையும் ஒப்பிட்டு, சமூக வலைதளங்களில் த.வெ.க.,வினர் விமர்சித்து வருகின்றனர்.

உங்ககிட்ட பணம் இருக்கலாம் உச்சபட்ச அதிகாரம் இருக்கலாம். அவதூறு பரப்ப ஆயிரம்

ஊடகங்கள் இருக்கலாம். ஆனால், மதுரையில் விஜய்க்கு வந்த மாதிரி எதையும் எதிர்பார்க்க முடியாது. அளவு கடந்த அன்பைக் காட்டுற மக்கள் படை மட்டும் என்னைக்குமே உங்களிடம் இருக்காது

மதுரையில், விஜய்க்கு அன்பால் தன்னெழுச்சியாக அலை கடலென திரண்டது மக்கள் கூட்டம். முதல்வர் ஸ்டாலினுக்கு, வெளியூரில் இருந்து காசு கொடுத்து கூட்டியும் கூடாத கூட்டம். அதாவது நீங்கள் நடத்தியது 'ரோடு ஷோ' அல்ல, காமெடி ஷோ. இவ்வாறு அவர்கள் பதிவிட்டுள்ளனர்.

இதற்கிடையில், மதுரையில் நடந்த பொதுக்குழுவில், விஜய் கட்சிக்கு ஆதரவாக வெளியான 'சர்வே' விவகாரத்திற்கு, முதல்வர் ஸ்டாலின் பதில் அளித்துள்ளார். சமீபத்தில், மும்பையைச் சேர்ந்த தனியார் நிறுவனம், வரும் சட்டசபை தேர்தல் குறித்து சர்வே எடுத்துள்ளது. அந்த சர்வே முடிவில், நடிகர் விஜய் கட்சியான த.வெ.க., தனித்துப் போட்டியிட்டு, 95 முதல் 105 தொகுதிகளை கைப்பற்றும் எனக் கூறியுள்ளது.

மேலும், தி.மு.க., 75 முதல் 85 தொகுதிகளும், அ.தி.மு.க., 55 முதல் 65 தொகுதிகளையும் கைப்பற்றும் என்றும், சொல்லப்பட்டுள்ளது. இந்த சர்வே, அரசியல் வட்டாரத்தில் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ஆளுங்கட்சி தரப்பில், அதற்கு எந்த விமர்சனமும் வராமல் இருந்த நிலையில், பொதுக்குழுவில், முதல்வர் ஸ்டாலின் அதுபற்றி கருத்து கூறியிருக்கிறார். இதுகுறித்து பொதுக்குழுவில் அவர் பேசியுள்ளதாவது:

சட்டசபை தேர்தலுக்கு இன்னும் சில மாதங்கள் தான் இருக்கின்றன. அதனால், வழக்கத்தைவிட அதிகமாக, தி.மு.க.,வுக்கு எதிராக, தி.மு.க., அரசுக்கு எதிராக, அவதூறு அம்புகளை மக்கள் மத்தியில் எதிராளிகள் வீசுவர். கருத்துக்கணிப்பு என்ற பெயரில், மக்கள் மனதில் பொய்யை விதைக்க முயற்சிப்பர் சமூக ஊடகங்கள் வாயிலாக விதைப்பர். இதையெல்லாம் முறியடிக்க, நாம் தயாராக வேண்டும். அவர்களைவிட, ஒரு படி முன்னால் இருக்க வேண்டும். அவர்களது பொய்களுக்கு முன்னால், நம் உண்மை மக்களிடம் சென்று சேர வேண்டும். இவ்வாறு அவர் பேசியுள்ளார். (ஐ)

# 'தக் லைப்' படம் திரையிட அனுமதி கோரி வழக்கு! கர்நாடக ஐகோர்ட்டில் நடிகர் கமல் மனு



நடிகர் கமலின், தக் லைப் திரைப்படத்தை வெளியிடுவதில் எந்த இடையூறும் இல்லாத வகையில், மாநில அரசுக்கும், போலீஸ் டி.ஜி.பி.,க்கும் உத்தரவிட வேண்டும் என, கர்நாடக உயர் நீதிமன்றத்தில், ராஜ்கமல் பிலிம் இன்டர்நேஷனல் நிறுவனம் சார்பில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மணிரத்னம் இயக்கத்தில், கமல் நடிப்பில் உருவாகி உள்ள, தக் லைப் திரைப்படம், வரும் 5ம் தேதி உலகம் முழுதும் வெளியாகிறது. சென்னையில் நடந்த இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழாவில் பேசிய கமல், 'தமிழில் இருந்து பிறந்தது கன்னடம்' என்றார்.

இதற்கு கர்நாடகா முழுதும் எதிர்ப்பு கிளம்பியது. 'கமல் மன்னிப்பு கேட்க வேண்டும்' என்று கன்னட அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

ஆனால், நடிகர் கமல், 'மன்னிப்பு கேட்க முடியாது' என கூறிவிட்டார். கர்நாடகாவில் கமல் படங்களுக்கு தடை விதிக்க கர்நாடக திரைப்பட வர்த்தக சபை தீர்மானித்து உள்ளது.

இந்நிலையில், ராஜ்கமல் பிலிம் இன்டர்நேஷனல் நிறுவனத்தின் சி.இ.ஓ.,வும், தக் லைப் படத்தின் இணை தயாரிப்பாளருமான நாராயணன், கர்நாடக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு:

தக் லைப் திரைப்படம், கர்நாடகா உட்பட உலகம் முழுதும் நாளை மறுநாள் வெளியாகிறது. இத்திரைப் படத்துக்காக, 300 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

படத்தின், இசை வெளியீட்டு விழாவில், கமல் பேசியது தவறாக புரிந்து கொள்ளப்பட்டு உள்ளது. அவரது பேச்சு கன்னடம், தமிழ் பேசுபவர்களுக்கு இடையிலான கலாசார ஒற்றுமை, பாசத்தை வெளிப்படுத்துகிறது. இருப்பினும், அது தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது.

இப்படத்தில் வரும் எந்த நடிகர்களின் வசனங்களிலும், இரண்டு மொழிகளும் குறிப்பிடப்படவில்லை. கமல் மன்னிப்பு கேட்டாலும், படத்தை வெளியிட அனுமதிக்க மாட்டோம் என்று கர்நாடக திரைப்பட வர்த்தக சபை தெரிவித்து உள்ளது. எனவே, படத்தின் வெளியீட்டுக்கு இடையூறு ஏற்படாமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திரைப்பட வர்த்தக சபைக்கும், கர்நாடக மாநில போலீஸ் துறைக்கும் தபால், மின்னஞ்சல் மூலம் கடந்த 31ம் தேதி கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும் இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை. எனவே, ஜூன் 5ம் தேதி கர்நாடகாவில் திரைப்படம் வெளியாவதற்கு மாநில அரசும், போலீஸ் துறையும், திரைப்பட வர்த்தக சபையினரும் விதித்துள்ள தடையை நீக்கி, திரைப்படம் பிரச்னையின்றி வெளியாக ஆவன செய்ய வேண்டும்.

திரையரங்கிற்கு போதுமான பாதுகாப்பு வழங்க, மாநில போலீஸ் டி.ஜி.பி.,க்கும், நகர போலீஸ் கமிஷனருக்கும் உத்தரவிட வேண்டும்.

படத்தின் தயாரிப்பாளர்கள், இயக்குநர் குழுவுக்கு தேவையான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும்.

மேலும், படம் வெளியாகும் திரையரங்கின் உரிமையாளர்கள், திரையரங்குகள், பார்வையாளர்கள், பொதுமக்களுக்கு எந்த சிரமமும் ஏற்படாமல் இருக்கவும், படம் திரையிடப்படும் அனைத்து திரையரங்குகளிலும் எந்த இடையூறும் ஏற்படாமல் இருக்கவும் தேவையான பாதுகாப்பை வழங்க வேண்டும்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டு உள்ளது. இம்மனு இன்று விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)



# விராட் கோலி பார் மீது வழக்கு

இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் விராட் கோஹ்லிக்கு சொந்தமான, பெங்களூரில் உள்ள பார் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொது இடங்களில் புகை பிடிப்பது, ஹூக்கா பார் நடத்துவதற்கு கர்நாடக காங்., அரசு தடை விதித்துள்ளது.

இதன்படி, பொது இடங்களில் புகை பிடிக்கக் கூடாது. பார் அண்ட் ரெஸ்டாரென்ட், பப், கிளப்களில் புகை பிடிக்க தனியிடம் ஒதுக்க வேண்டும். இந்த விதிமுறையை மீறுவோர் மீது வழக்கு தொடரப்படும்.

பெங்களூரு எம்.ஜி., சாலை அருகில் உள்ள, 'ஒன் 8 கம்யூன் பார் அண்டு ரெஸ்டாரென்ட்' இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் விராட் கோலிக்கு சொந்தமானது. இங்கு புகை பிடிக்க தனியிடம் ஒதுக்காமல், உணவருந்தும் இடத்திலேயே புகை பிடிக்க அனுமதி அளிக்கப்பட்டது.

கப்பன் பூங்கா போலிஸார், மே 29ம் தேதி இந்த பாருக்கு சென்று சோதனை நடத்தியபோது, விதிகளை மீறியது தெரிந்தது. இதுகுறித்து, நீதிமன்றத்திடம் அனுமதி பெற்று, அந்த பார் மீது நேற்று வழக்கு பதிவு செய்தனர்.

இந்த பார் மீது வழக்கு பதிவாவது, இது முதன் முறையல்ல. 2024 ஜூலை 6ம் திகதி, அதிகாலை 1:20 மணி வரை பார் திறந்திருந்தது. இதற்காக, கப்பன் பூங்கா போலீஸ் நிலையத்தில் எப்.ஐ.ஆர்., பதிவானது.

இதையடுத்து, தீயணைப்பு துறையிடம் அனுமதி பெறாமல், மாநகராட்சி உரிமமின்றி, பார் அண்ட் ரெஸ்டாரென்ட் நடத்துவதாக குற்றச்சாட்டு எழுந்தது. எனவே, இந்த பாருக்கு, 2024 டிசம்பரில், பெங்களூரு மாநகராட்சி நோட்டீஸ் அனுப்பியது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேச பக்தியுடன் இருப்பது கடினமா? காங்., மூத்த தலைவர் ஆவேசம்!

பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவை உலகுக்கு அம்பலப்படுத்த, வெளிநாடுகளுக்கு சென்றிருக்கும் எம்.பி.,க்கள் குழுக்களில், காங்., உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் இடம்பெற்றுள்ளது குறித்து கேள்வி எழுப்பப்படும் நிலையில், "தேசபக்தியுடன் இருப்பது அவ்வளவு கடினமா?" என, காங்., மூத்த தலைவர் சல்மான் குர்ஷித் ஆவேசமாக தெரிவித்தார். 'ஆப்பரேஷன் சிந்துார்' மற்றும் பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவை உலகிற்கு அம்பலப்படுத்த, காங்., - எம்.பி., சசி தரூர், தி.மு.க., - எம்.பி., கனிமொழி உள்ளிட்ட ஏழு பேர் தலைமையில், ஏழு குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இந்த குழுக்களில் எதிர்க்கட்சி எம்.பி.,க்களும் உள்ளனர். தலா ஐந்து முதல் ஆறு நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்த குழுவினர், நம் நாட்டின் நிலைப்பாட்டை விளக்கி வருகின்றனர்.

சசி தரூரின் இந்த செயலால் அதிருப்தி அடைந்த காங்., நிர்வாகிகள், பா.ஜ.,வின் சூப்பர் செய்தித் தொடர்பாளர் போல் அவர் செயல்படுவதாக விமர்சித்தனர்.

நாட்டின் ஒற்றுமை விவகாரத்தில், சொந்த கட்சியினரே சசி தரூரை விமர்சித்தது, பரபரப்பை ஏற்படுத்தியது.

காங்., மற்றொரு மூத்த தலைவரான சல்மான் குர்ஷித், ஐக்கிய ஜனதா தள எம்.பி., சஞ்சய் குமார் ஜா தலைமையிலான குழுவில் இடம் பெற்றுள்ளார். தென் கொரியா, சிங்கப்பூர், ஜப்பான், இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கு சென்ற இந்த குழு, தற்போது மலேஷியாவில் உள்ளது. பயங்கரவாதத்திற்கு எதிரான பணியில் இந்தியாவின் செய்தியை உலகிற்கு எடுத்துச் செல்லும் போது, உள்நாட்டில் உள்ளவர்கள் அரசியல் விசுவாசத்தை கணக்கிடுவது வருத்தமளிக்கிறது. தேச பக்தியுடன் இருப்பது அவ்வளவு கடினமா? இவ்வாறு அவர் பதிவிட்டார்.

நம் நாட்டின் ஒற்றுமைக்காகவும், பயங்கரவாதத்துக்கு எதிராகவும் நாங்கள் ஒன்று சேர்ந்துள்ளோம். இதில் அரசியல் பார்ப்பது சரியல்ல.

மத்திய அரசை எதிர்க்க விரும்பியிருந்தால் நான் வீட்டிலேயே இருந்திருக்கலாமே. நான், இந்தியாவுக்காக பேச வந்துள்ளேன். நாட்டுக்காக யார் பேசினாலும் அவருக்கு ஆதரவு என்றார்


(ஐ)



# இறைவன் படைத்த உயர்ந்த படைப்பினர்

மாதர்கள் மானிடம் தழைக்க, இறைவன் படைத்த உயர்ந்த படைப்பினர் ஆவர். ஞாலத்தின் பொறுமையும், அழகுக் கோலத்தின் பெருமையும் பெற்ற பெண்களாலே மானிட சமுதாயம் வெற்றி நடை போடுவதை காண முடிகின்றது. உலக சரித்திரத்தில் மனிதர்களின் சுதந்திரம். உரிமைகள் சிறந்த நிலையை கடந்து வந்தமைக்கு பெண்களின் வளர்ச்சியே சான்றாகின்றது. அக்காலத்திலும், இக்காலத்திலும், எக்காலத்திலும் பெருமை சேர்த்த தரப்பினராக பெண்கள் விளங்குகின்றனர் என்றால் அது மிகையாகாது. அரசியலில் சாணக்கியம் பெற்ற பெண்கள், அறிவியலில் ஆதிக்கம் பெற்ற பெண்கள், பொருளியலில் புதுமை படைத்த பெண்கள். இலக்கியத்தில் எழுச்சி பெற்ற பெண்கள், கலைகளின் பொக்கிசமாய் விளங்கும் பெண்கள் என்றெல்லாம் மன மகிழ்ச்சியுடன் நாம் புகழ்ந்தாலும், சவால்களைக் கடந்தே பெண்கள் சாதனை புரிகின்றனர் என்பது நிதர்சன மாகும்.

அன்றைய உலகில் பெண்கள் பொதுவாக உயர்ந்த நிலை பெற்றிருந்தமையை காண முடிகின்றது. தாய்வழிக் கோட்பாட்டு அறிஞர்களின் கருத்துப்படி ஆரம்ப நாகரிக வாழ்க்கையில் பெண்கள் தலைமை தாங்கிய சமுதாயம் பற்றி விளக்கப்பட்டுள்ளது. சான்றாக ராகுல சங்கிருத்தியயன் என்பவரின் “வொல்கா முதல் கங்கை வரை” எனும் நூலில் ஐரோப்பிய நாகரிகம். சிந்து வெளி நாகரிகம் முதலிய நாகரிகங்களில் பெண்கள் குடும்பங்களின் தலைமைத்துவத்தை வழிநடத்தியதாகக் கூறப்பட்டுள்ளது.



சங்ககாலத்தில் பெண்கள் பெருமரியாதையாக நடத்தப்பட்டதாக சான்றுகள் உள்ளன. ஔவையார் முதலிய பெண்பாற்புலவர்களும். அரசியரும் சிறந்த கௌரவத்துடனும், மரியாதையாகவும் வாழ்ந்துள்ளனர். பாரி பெற்றெடுத்த அங்கவை, சங்கவை முதலான மாதர்கள் சமூகத்தில் மாண்பு பெற்றிருந்தனர்.

புலவர்களில் ஔவையாருக்கு தனிமரியாதை இருந்துள்ளது. அதியமான் நெடுமானஞ்சி எனும் சேரமன்னன் ஔவையாரோடு சேர்ந்து தமிழும் நீண்ட நாள் வாழ்வதற்காக அரிய மருத்துவ குணம் படைத்த மலையில் விளைந்த கருநெல்லிக்கனியை பரிசாக அளித்ததாக இலக்கியம் இயம்புகின்றது. மன்னர்களுக்கிடையே ஔவையார் தூது சென்றதாக புறநானூறு கூறுகின்றது.

சங்ககாலத்தில் பெண்கள் சவால்மிக்க வாழ்க்கை வாழ்ந்தமையையும் சான்றுகள் பல் எடுத்தியம்புகின்றன. உடன்கட்டை ஏறுதல், காளை அடக்குதல் முறையுடனான மணமுறை முதலியவற்றுடன் பரத்தமை தொழிலும் பெண்களுக்கு இழிவையே சுட்டிநிற்கின்றன. பூதப்பாண்டியனின் மனைவி பெருங்கோப் பெண்டீர் உடன்கட்டை ஏறியமை பற்றி புறநானூறு விளக்குவதுடன், பரத்தையரில் சேரிப்பரத்தை. காமப் பரத்தை, காதல் பரத்தை எனும் வகையினர் இருந்ததாகவும் இலக்கியங்கள் விளக்குகின்றன.

இடைக்காலத்தில் பல காரணங்களால் மாதர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியது. சமூக. அரசியல், பொருளாதார, அந்நியப்படையெடுப்புக்களால் விளிம்புநிலை பெண்களின் வாழ்க்கை பெரு இன்னல் நிறைந்ததாக மாறியது. சொத்துரிமை, பேச்சுரிமை, கல்வி, தொழில். அடிப்படை மனித உரிமைகளில் பெண்கள் சீரழிவுக்கு ஆளாகினர். சிறுவர் திருமணம், மண விலக்கு, சீதனம், உடைமை மறுப்பு. மறுமண மறுப்பு. சாதிப்பாகுபாடு, பெண்ணடிமைத்தனம் என்றெல்லாம் பெண்கள் பாதிக்கப்பட்டிருந்தனர், இவை ஆணாதிக்கத்தின் நிலையை சுட்டுவதாக அமைந்தன.

சோழர்காலத்தில் பெண்கள் யர்நிலை பெற்றிருந்தமைக்கு இராஜராஜ சோழன் தமக்கையாரான குந்தவையின் ஆலோசனையின் பேரில் ஆட்சி நடத்தியமையும், சைவத்தைக் காக்க தஞ்சைப் பெருங்கோவில் போன்ற திருத்தலங்களை அமைத்து அறப்பணி ஆற்றியமையும் தக்க சான்றுகளாம். ஆனால் சோழர்காலத்தில் பெண்கள் அவமரியாதை பெற்றமைக்கு இக்கால ஔவையார் பாடிய “தையல் சொல் கேளேல்” எனும் செய்யுள் அடி சான்றாகின்றது. அத்துடன் பெண்கள் கலைகளின் நிமித்தம் அடிமைகளாக நடத்தப்பட்டமையும் சோழர்கால இலக்கியங்களில் அறியக்கிடக்கின்றது. நடனத்தொழிலுக்குரிய மாதர்கள், கோவிலுக்கு தொண்டாற்றும் குடும்பத்தைச் சேர்ந்த மாதர்கள் என்றெல்லாம் பல வகை அடிமைகளாக பெண்கள் இருந்துள்ளனர்.

**சங்ககாலத்தில் பெண்கள் சவால்மிக்க வாழ்க்கை வாழ்ந்தமையையும் சான்றுகள் பல் எடுத்தியம்புகின்றன. உடன்கட்டை ஏறுதல், காளை அடக்குதல் முறையுடனான மணமுறை முதலியவற்றுடன் பரத்தமை தொழிலும் பெண்களுக்கு இழிவையே சுட்டிநிற்கின்றன. பூதப்பாண்டியனின் மனைவி பெருங்கோப் பெண்டீர் உடன்கட்டை ஏறியமை பற்றி புறநானூறு விளக்குவதுடன், பரத்தையரில் சேரிப்பரத்தை. காமப் பரத்தை, காதல் பரத்தை எனும் வகையினர் இருந்ததாகவும் இலக்கியங்கள் விளக்குகின்றன.**

இடையில் தோன்றிய பழமொழிகள் பல் பெண்களை இழிவுபடுத்துவதைக்காணலாம். “பெண்புத்தி பின்புத்தி”, “அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?” “பொம்பிள சிரிச்சாப் போச்சு புகையிலை விரிச்ச ஆச்சு” என அவை அமைகின்றன. பெண்களை பாலினத்தின் அடிப்படையில் பாகுபாடு பார்க்கும் நிலையில் கொடுமையானது. இந்தியாவில் பெண் குழந்தைகள் கள்ளிப்பால் கொடுத்து கொல்லப்படும் நிலை இன்றும் மதுரை போன்ற பழங்கிராமங்களில் இல்லாமல் இல்லை. இந்தியாவில் மாமியார் கொடுமை, சீதனக் கொடுமை, உத்தரப் பிரதேசத்தில் தலித் இனப் பெண்கள் மீதான பாலியல் கொடுமை என்றெல்லாம் எம்மால் அடுக்கிக் கொண்டே போகுமளவுக்கு பெண்களின் நிலை மோசமாகத்தான் இருக்கின்றது.

இன்றைய நிலையில் பெண்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள், அவர்கள் அடைந்த சாதனைகள் என்பவற்றை நாம் ஆராய முன்னர் பெண்கள் பெற்றிருந்த இறுக்கமான சூழ்நிலையை எம்மால் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்திய தேசத்தில் பாரதியார் தோன்றி பெண்ணடிமைக்கு எதிராக பேசும் வரை இந்திய தேசம் பெண்களை கண்டு கொள்ள வில்லை. எரிமலைக் கவிஞரான சுப்பிரமணியப் பாரதியார் பெண்ணடிமையை நீக்குவதைப் பற்றி பல கவிதைகளில் விளக்கியுள்ளார். புதுமைப்பெண், பெண் விடுதலைக் கும்மி, பெண்மை, பாஞ்சாலி சபதம். எனப் பல தரப்பட்ட கவிதைகளில் பெண்ணைப் பற்றிப் பாடியுள்ளார். “நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் -ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்களின் குணங்களாம்” என்றும் பாரதியார் பாடியதைக் குறிப்பிடலாம். ஆணும் பெண்ணும் நிகராக நடத்தப்பட வேண்டும். கற்பு ஆணுக்கும். பெண்ணுக்கும் பொதுவானது. பெண்ணாக விளங்குவது அன்னை பராசக்தி என்றும் கடவுளின் நிலையைக் கொடுத்து பாரதியார் போற்றியுள்ளமை சிறப்பிற்குரிய தாகும்.

எம் ஈழத்திருநாட்டிலும் பெண் பெருமை பேசும் இலக்கியப் படைப்புக்கள் எழுந்துள்ளதை திருகோணமலையைச்சேர்ந்த தி.த சரவணமுத்துப் பிள்ளை எனும் அறிஞர் பாடிய “தத்தை விடுதூது” மூலம் “பெண்ணைக் கூட்டிற் பசுங்கிளி போல் பூட்டி வைத்தார்...” எனும் வரிகளும், வ.அ இராசரெத்தினம் படைத்த ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கின்றது எனும் நாவல் வலியுறுத்தும் பெண் கல்வி பற்றிய செய்தியும் உறுதிப்படுத்துகின்றன.

பெண்களை போற்றும் நிலையில் இன்று மகளீர் தினம் அன்னையர் தினம் என பல சிறப்பு தினங்கள் கொண்டாடப் படுகின்றன. பெண்கள் இன்று விண்வெளியில் சாதிப்போராகவும், நோபல் பரிசை வென்றெடுப்போராகவும். உலக நாடுகளின் தலைவர்களாகவும், சட்டத்துறை வல்லுனர்களாகவும், அறிவியல் மேதைகளாகவும் திகழ்வதை காண முடிகின்றது. இந்திய விண்வெளி வீராங்கனைகளான மரணித்த கல்பனா சௌலா எனும் பெண்மணியும். சுனிதா வில்லியம்ஸ் ஆகியோரும், ரஸ்யாவின் வெலன்ரீனா தெரஸ்கோவா எனும் பெண்ணும் விண்வெளியில் சாதித்தமை சிறப்பிற்குரியது. இமய மலையின் சிகரத்தைத் தொட்ட யுங்கொ இசுவசி எனும் யப்பானியப் பெண்ணும், நோபல் பரிசு வென்றெடுத்த மேரி ஹியுரி, அன்னை தெரேசா, கொங்சாங் சூகி போன்றோரும், தற்கால அவுஸ்ரேலியா, நியுசிலாந்து. பங்களாதேஷ். தென்கொரியா. பிறேசில் நாட்டுத் தலைவர்களாக பெண்கள் விளங்கி அரசியலில் சாதித்தமையும், பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை பெற்ற தேசமாக எம் நாடு விளங்குவதையும். உலகத்தின் முதல் பெண் பிரதமரான ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க எமது நாட்டவர் என்பதும் பெருமைக்குரியது.

எனவே “பெண்கள் நாட்டின் கண்கள்” என்பதற்கிணங்க, பெண்களின் எழுச்சி முழு உலகின் எழுச்சி எனவும், பெண்களின் வீழ்ச்சி முழு உலகின் வீழ்ச்சி எனவும் விளங்கி மானிடர்களாகிய நாம் ஆணையும். பெண்ணையும் சமமாக மதித்து வாழ தலைப்படுவோமாக.

# ட்ரோன் தாக்குதலில் 5 பேர் உயிரிழப்பு உக்ரைனுக்கு பதிலடி கொடுத்தது ரஷ்யா!



கிழக்கு உக்ரைன் முழுவதும் பல்வேறு பகுதிகளில், ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் பொதுமக்கள் 5 பேர் கொல்லப்பட்டனர்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது, 2022ம் ஆண்டு பிப்ரவரி மாதம் ரஷ்யா போர் தொடுத்தது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாகவும் இந்த போர் தொடர்கிறது. ஆபரேஷன் சிலந்தி வலை என்ற பெயரில், ரஷ்யா மீது உக்ரைன் நடத்திய ட்ரோன் தாக்குதல், உலக நாடுகளை மிரள வைத்துள்ளது.

இந்த தாக்குதலில், 30 போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டது, ரஷ்யாவுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.

உலகை ஆச்சர்யப்படுத்திய ஆபரேஷன் ஸ்பைடர்வெப் உக்ரைன் தாக்குதலில் ரஷ்யா திணறல்!

இந்நிலையில், கிழக்கு உக்ரைன் முழுவதும் பல்வேறு பகுதிகளில், ரஷ்யா ட்ரோன் தாக்குதல் நடத்தியது.

குண்டுவீசும் ரஷ்யா கையை உடைக்க உக்ரைன் நடத்திய தாக்குதல் ருமசயனையைெ னுசழநெள ஞுவசமைந யுசைடியளந ஐெ சுரளளயை

உக்ரைனில் டொனெட்ஸக் மற்றும் கார்கிவ் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ரஷ்யா நடத்திய ட்ரோன் தாக்குதலில் பொதுமக்கள் 5 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 5 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

மேலும் உக்ரைனுக்கு மிகப் பயங்கரமான பதிலடி தருவதற்கு ரஷ்யா தயாராகி வருகிறது. இதனால் மேற்கத்திய நாடுகளில் பதற்றமான சூழல் நிலவுகிறது (ஐ)

## டிரம்ப் ஆதரவாளர் போலந்து அதிபராக தேர்வு் ஐரோப்பிய யூனியனில் இனி 'குடுமிப்பிடி'தான்

போலந்து நாட்டில் நடந்த அதிபர் தேர்தலில், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் ஆதரவாளரான, பழமைவாத கட்சியின் கரோல் நவ்ரோக்கி, 42, வெற்றி பெற்றுள்ளார்.

ஐரோப்பிய நாடான, போலந்தின் அதிபராக உள்ள ஆந்தரிஸ் டுடாவின் பதவிக்காலம், வரும் ஆக.,ல் முடிய உள்ளது. இதையடுத்து புதிய அதிபரை தேர்வு செய்வதற்கான தேர்தல் இரண்டு கட்டங்களாக நடந்தன.

கடந்த மாதம் 18ம் தேதி நடந்த முதற்கட்டத் தேர்தலில், ஐரோப்பிய யூனியன் ஆதரவு வேட்பாளரான ரபால் டிர்சாஸ்கோவ்ஸ்கி மற்றும் பழமைவாத கட்சி வேட்பாளரான கரோல் நவ்ரோக்கி முதல் இரண்டு இடங்களைப் பிடித்தனர்.

இதைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாம் கட்டத் தேர்தலில் பதிவான ஓட்டுகள் நேற்று எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

இதில், துவக்கத்தில் இருந்தே முன்னிலை வகித்த பழமைவாத கட்சி வேட்பாளரான கரோல் நவ்ரோக்கி, 50.89 சதவீத ஓட்டுகளைப் பெற்று வெற்றி பெற்றதாக அந்த நாட்டின் தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தாராளவாத கட்சி வேட்பாளரும், தலைநகர் வார்சாவின் மேயருமான ரபால் டிர்சாஸ்கோவ்ஸ்கி, 49.11 சதவீத ஓட்டுகளை பெற்றார்.

ரஷ்யாவுடன் போரை சந்தித்து வரும் அண்டை நாடான உக்ரைனில் இருந்து வந்த அகதிகளுக்கு ஆதரவான கொள்கை உடையவர் நவ்ரோக்கி. நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதை எதிர்ப்பதோடு, ஐரோப்பிய யூனியன் மீதும் சந்தேகம் தெரிவித்தார்.

போலந்தில் பிரதமர் மற்றும் பார்லிமென்ட் தான், நாட்டு நிர்வாகத்தை கவனிக்கும். அதே நேரத்தில் சர்வதேச விவகாரங்கள் உள்ளிட்டவற்றில் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதை அரசு நிறைவேற்ற அதிபரால் உத்தரவிட முடியும். தற்போது பிரதமராக உள்ள டொனால்டு டஸ்க் மற்றும் அதிபராக உள்ள ஆந்தரிஸ் டுடா இடையே பல விஷயங்களில் மோதல்கள் உள்ளன.

தேர்தல் வாக்குறுதிகள் மற்றும் ஐரோப்பிய யூனியனுக்கு அளித்துள்ள உறுதிமொழிகளை நிறைவேற்றுவதில், பிரதமர் டஸ்க் மேற்கொண்ட முயற்சிகளுக்கு, டுடா முட்டுக்கட்டை போட்டார்.

அடுத்த அதிபராக தேர்வாகியுள்ள நவ்ரோக்கி, ஐரோப்பிய யூனியன் மற்றும் நேட்டோ அமைப்புக்கு எதிரான கொள்கையை உடையவர். அதனால், பிரதமர் டொனால்டு டஸ்க் உடனான மோதல் தொடரும்.

அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் ஆதரவு கொள்கை உடையவர் நவ்ரோக்கி. அதனால், ஐரோப்பிய யூனியன் மற்றும் நேட்டோ அமைப்புகளில், போலந்து தொடர்ந்து எதிர்ப்பு குரலையே ஒலிக்கும் என, கூறப்படுகிறது.

(ஐ)

## போரை விரும்பவில்லை வளர்ச்சியை விரும்புகிறோம் பிரேசிலில் சசி தரூர் பேச்சு சிறப்பு செய்தியாளர்



"நாங்கள் போரை விரும்பவில்லை. வளர்ச்சியில் கவனம் செலுத்த விரும்புகிறோம்" என பிரேசிலில் காங்கிரஸ் எம்.பி., சசி தரூர் பேசுகையில் தெரிவித்தார்.

'ஆபரேஷன் சிந்தூர் ' நடவடிக்கை குறித்து விளக்கமளிக்க அனைத்து கட்சி எம்.பி.,க்கள் குழு வெளிநாடுகளுக்கு சென்றுள்ளது. சசி தரூர் தலைமையிலான குழு பிரேசிலுக்கு சென்றுள்ளது.

பிரேசிலில் பார்லிமென்ட் உறுப்பினர்களை காங்கிரஸ் எம்.பி., சசி தரூர் சந்தித்து பேசினார். பின்னர் சசி தரூர் பேசியதாவது:

அமெரிக்க அதிபர் பதவியின் மீது எங்களுக்கு மிகுந்த மரியாதை உண்டு, அந்த மரியாதையை மனதில் கொண்டுதான் நாங்கள் பேசுவோம். பாகிஸ்தான் உடன் மோதலை நிறுத்தும் படி, யாரும் எங்களை வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை. நாங்கள் ஏற்கனவே நிறுத்தச் சொல்லியிருந்தோம்.

நாங்கள் போரை விரும்பவில்லை என்பதால் நாங்கள் வற்புறுத்தப்பட வேண்டிய அவசியமில்லை. வளர்ச்சியில் கவனம் செலுத்த விரும்புகிறோம். மே 7ம் தேதி தொடக்கத்தில் இருந்தே மோதலை நீடிப்பதில் எங்களுக்கு ஆர்வம் இல்லை என்று நாங்கள் தொடர்ந்து கூறி வந்தோம்.

பயங்கரவாதிகளுக்கு பதிலடி கொடுக்கவே தாக்குதல் நடத்தினோம். இல்லை என்றால் தாக்குதல் நடத்தி இருக்க மாட்டோம். அமெரிக்காவில் பாகிஸ்தான் தூதுக்குழு செல்லும் அதே நாளில் நாங்களும் வாஷிங்டனில் இருப்போம். பாகிஸ்தானியர்கள் வெளிநாடுகளுக்கு ஒரு தூதுக்குழுவை அனுப்பியிருப்பது தற்செயலானது அல்ல.

ஆனால் அவர்கள் இந்திய பிரதிநிதிகள் சென்ற அளவு பல நாடுகளுக்கு செல்லவில்லை. அவர்கள் சில முக்கிய தலைநகரங்களாக நினைக்கும் இடத்திற்கு மட்டுமே சென்றார்கள். இந்தியாவைப் பற்றி அக்கறை கொண்டவர்கள், பயங்கரவாதத்தை எதிர்ப்பவர்களின் கவனத்தை நாம் பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

## மாறி மாறி வரி விதித்து வர்த்தக பதட்டம் தீர்வு காண அதிபர் டிரம்ப், சீன அதிபர் பேச்சுவார்த்தை!




வர்த்தக பதட்டங்களைத் தணிப்பது குறித்து, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் இந்த வாரம் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அமெரிக்கா பொருட்களுக்கு சீனா அதிக வரி விதித்து வருகிறது என அதிபர் டிரம்ப் குற்றம்சாட்டினார். இதனையடுத்து சீன பொருட்களுக்கு அதிக வரி விதிக்க துவங்கினார். இதற்கு பதிலடியாக சீனாவும் வரி விதிக்க, இரு நாடுகளுக்கு இடையே வர்த்தக போர் துவங்கியது.

ஒரு கட்டத்தில் சீன பொருட்களுக்கு அமெரிக்கா 145 சதவீதம் வரி விதித்தது. இரு நாடுகளுக்கு இடையே நடந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து புதிய வரி விதிப்பை 90 நாட்களுக்கு நிறுத்தி வைத்தன. மேலும் சுவிட்சர்லாந்தின் ஜெனிவா நகரில் இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தம் ஏற்பட்டது. பின்னர், வர்த்தக ஒப்பந்தத்தை சீனா மீறிவிட்டது என அதிபர் டிரம்ப் குற்றம்சாட்டி உள்ளார்.

இந்நிலையில், வர்த்தக பதட்டங்களைத் தணிப்பது குறித்து, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் இந்த வாரம் தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. வரி விதிப்பிற்கு முற்றுப்புள்ளி வைப்பது, உறவுகளை வலுப்படுத்துவது குறித்து இரு நாட்டு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகையின் பத்திரிகை செயலாளர் கரோலின் லீவிட் கூறியதாவது: வர்த்தக பதட்டங்களைத் தணிப்பது குறித்து, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். அதிக வரி விதிப்பு மற்றும் பிற வர்த்தக பிரச்னைகளை தீர்க்க முக்கிய முடிவு எடுக்கப்படும், என்றார். (ஐ)

**சுற்றாடல்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுற்றாடல்தொனிப்பொருளுக்கு அமைவாக சுற்றாடல் வாரமானது மே மாதம் 30 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை கொண்டாடப்படுகின்றது.

இதனடிப்படையில்யாழ். பண்ணைக்கடற்கரையைச் சுத்தப்படுத்தும் நிகழ்வு யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் அதிகார சபையின் மாவட்ட உதவிப் பணிப்பாளர் தவகிருபா தலைமையில் இன்று காலை இடம்பெற்றது.

இதன்போது பண்ணைக் கடற்கரை வளாகத்தில் காணப்பட்ட கழிவுகள் தரம்பிரிக்கப்பட்டு தூய்மைப்படுத்தல் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் சூரியராஜா, யாழ். மாவட்ட விசேட அதிரடிப் படை பொறுப்பதிகாரி டி.எல் .இலகமகே, மத்திய சுற்றாடல் அதிகார சபையினர், யாழ். பொலிஸ் நிலையச் சுற்றாடல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினர், கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மாநகர சபை ஊழியர்கள், உத்தியோகத்தர்கள், சுற்றுச்சூழல் தன்னார்வலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**அநுரவுக்கு.....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டியதும், சட்டவிரோதமானதுமான இந்திய இழுவை மடி வலைப் படகுகளின் தொழில் செயற்பாடுகள் காரணமாக எமது கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரங்களும், கடல் வளமும் பாரியளவில் பாதிக்கப்பட்டு வருவதை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

இத்தகைய செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நாமும் பல்வேறு முயற்சிகளை எடுத்திருந்தும், அவை முழுமை பெறவில்லை.

தற்போது மீனினங்களின் இனப்பெருக்க காலம் என்பதால் இந்திய மீனவர்கள் எமது கடற்பரப்புக்குள் தொழில் நிமித்தம் வருவதில்லை. இது ஒவ்வொரு வருடமும் நிகழ்வதாகும்.

அந்தவகையில் இந்த வருடம் இக்காலகட்டம் கடந்த ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி தொடங்கி எதிர்வரும் 15ஆம் திகதி முடிவடைகின்றது.

இந்தக் காலகட்டம் முடிவடைந்த நிலையில் - அதாவது எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் ஆயிரக்கணக்கிலான இந்திய இழுவை மடி வலைப் படகுகள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நிச்சயமாக வரும்.

எனவே, இந்த விடயம் தொடர்பில் தங்களது அவதானத்தைச் செலுத்தி, ஒரு பக்கத்தில் இது தொடர்பான இராஜதந்திர ரீதியிலான பேச்சுகளை இந்திய அரசுடன் மேற்கொண்டும், மறு பக்கத்தில் இலங்கையில்சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டும், இந்திய இழுவை மடி வலைப் படகுகளின் இலங்கைக் கடற்பரப்புக்குள்ளான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்." - என்றுள்ளது.

**தாய்க் கட்சி...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொள்ள வேண்டும். அதற்கு ஏனையோரும் ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு.

முதலில் நாம் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன்தான் பேச்சுகளை முன்னெடுத்திருந்தோம். எனினும், எந்த விட்டுக்கொடுப்பையும் செய்வதற்கு அவர்கள் முன்வரவில்லை. அவர்களுக்கு இருக்கும் உள்ளகப் பிரச்சினையா அல்லது அந்த உறுப்பினர்களின் மனநிலையா என்பது எனக்குத் தெரியவில்லை.

ஆனால், ஒரு பெரிய தாய்க் கட்சி என்று சொல்லிக்கொள்கின்ற ஒரு கட்சி ஒரு சில இடங்களிலாவது ஏனையோருக்கு விட்டுக்கொடுக்கும் மனநிலைக்கு வந்திருக்க வேண்டும். ஆனால், அது நடைபெறவில்லை.

அந்தவகையில்தான் அவர்களுடன் பேச்சில் ஈடுபட்ட அதேவேளை தமிழ்த் தேசியப் பேரவையுடனும் பேச்சில் ஈடுபட்டிருந்தோம். தமிழ்த் தேசியப் பேரவையைப் பொறுத்த வரையில் சில சபைகளைப் பகிர்ந்துகொள்வதற்கும் எமக்குச் சில சபைகளை விட்டுக் கொடுப்பதற்கும் முன்வந்திருந்தார்கள்.

அந்தவகையில் நாங்கள் அவர்களுடன் ஓர் உடன்படிக்கையைச் செய்திருக்கின்றோம். அரசியலில் நாங்கள் வெறுமனே உறுப்பினர்களாக இருந்துவிட்டு நான்கு வருடங்கள் முடிந்ததன் பின்னர் எமது கட்சியின் இருப்பிடம் எங்கே என்று தெரியாத அளவுக்குப் போய்விடுவோம். ஆகவே, அரசியலில் இது சாதாரணமான விடயம்.

அதிகாரம் இருந்தால் மாத்திரமே ஓர் அரசியல் கட்சி ஈர்ப்புடன் இருக்க முடியும். ஆகவே, நாங்கள் ஏனைய கட்சிகளுக்குப் பாரிய மோசமான நிலைமை ஏற்படுத்தாத வகையில் சாதகமான இடங்களில் ஆட்சி அமைப்பதற்கான செயற்பாடுகளை நாங்கள் செய்திருக்கின்றோம். ஆகவே, நாங்கள் சில சபைகளில் ஆட்சி அமைக்கலாம் என்று எண்ணுகின்றோம். வவுனியா மாநகர சபையிலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆட்சி அமைக்கும்." - என்றார்.

**கட்டிய...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தப் பயங்கரச் சம்பவம் வவுனியா, புளியங்குளம் பகுதியில் இன்று இடம்பெற்றுள்ளது.

புளியங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு இன்று காலை மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர், கையில் இருந்த பொலித்தீன் பையினுள் தனது மனைவியின் தலை இருப்பதாகவும், அவரைக் கொலை செய்து காட்டுப் பகுதியில் உடலை விட்டு வந்துள்ளதாகவும் கூறினார். இதனால் அதிர்ச்சியடைந்த பொலிஸார், யாழ்ப்பாணத்தை சேர்ந்த கோ.சுகிர்தரன் என்ற நபரை உடனடியாகக் கைது செய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் உயிரிழந்த பெண்ணின் சடலம் சின்னபூவரசன்குளத்தில் அமைந்துள்ள காட்டுப் பகுதியில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அனந்தர் புளியங்குளம், நொச்சிகுளத்தைச் சேர்ந்த ஆசிரியையான சுகிர்தரன் சுவர்ணலதா வயது 32 என்ற பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார். அவர் கர்ப்பிணிப் பெண் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கணவன் - மனைவி இருவருக்கும் இடையில் நீண்ட காலமாகக் குடும்பத் தகராறு நிலவி வந்துள்ளது.

இந்நிலையில் மனைவியைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்த கணவன், இன்று காலை நொச்சிகுளம் பகுதியில் இருந்து மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் புளியங்குளம் நோக்கிச் சென்று அங்கு வைத்து அவரைக் கொலை செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது. சம்பவம் தொடர்பாகப் புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**பிரதமர்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தப்பட விருப்பதாகவும் அமைச்சரவையில் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் வெளியாகும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும். அமைச்சரவை மறுசீரமைப்பு தொடர்பிலோ - அமைச்சர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்துவது தொடர்பிலோ இதுவரை எந்தவொரு கலந்துரையாடலும் முன்னெடுக்கப்படவில்லை.

அரசுக்கு எதிரானவர்களால் திட்டமிட்டு இந்தச் செய்தி பரப்பப்பட்டுள்ளது. அவதானத்தைத் திசை திருப்புவதற்காகவும், அரசுக்குள் குழப்பத்தை ஏற்படுத்தும் நோக்கத்திலும் இவ்வாறான செய்திகள் திட்டமிட்டு வெளியிடப்படுகின்றன. எந்தவகையிலும் அமைச்சரவையில் மாற்றம் ஏற்படுத்தப்பட மாட்டாது. பிரதமர் ஹரிணியை மாற்றும் எண்ணமும் இல்லை." - என்றார்.

## மருத்துவ ஆய்வகம் ஒன்றுக்கு 500,000 ரூபாய் அபராதம்!

மல்வானை பகுதியில் உள்ள மருத்துவ ஆய்வகம் ஒன்றுக்கு 500,000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட மருத்துவ ஆய்வகம் முழு இரத்த எண்ணிக்கை பரிசோதனை அறிக்கைக்கு அதிக கட்டணம் வசூலித்தமையால், தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து அபராதம் விதிக்கப்பட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குறித்த அபராதம் மஹர நீதவான் நீதிமன்றத்தால் நேற்று விதிக்கப்பட்டுள்ளது.

முழுமையான இரத்த எண்ணிக்கை பரிசோதனை அறிக்கைக்கு நுகர்வோர் விவகார அதிகாரசபையால் விதிக்கப்பட்டுள்ள அதிகபட்ச கட்டணம் 400 ரூபாய் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தனியார் பல்கலைக்கு முன்பாக போதைப்பொருள்கள் விற்பனை
### இளைஞர் ஒருவர் கைது

கொழும்பு, ஜூன் 3

கொழும்பு, மாலம்பே பிரதேசத்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்துக்கு முன்னால் போதைப்பொருள் விற்பனை செய்து வந்த இளைஞர் ஒருவர் வலான ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வலான ஊழல் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் கடுவலை பிரதேசத்தில் வசிக்கும் 26 வயதுடைய இளைஞர் ஆவார்.

சந்தேகநபரான இளைஞரிடமிருந்து 480 கிராம் கொக்கேயின், 71 கிராம் குஷ் மற்றும் 50 கிராம் ஹேஷ் உள்ளிட்ட போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வலான ஊழல் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பஸ்ஸில் சில்லுக்குள் சிக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழப்பு

குருணாகல், ஜூன் 3

குருணாகலில் போதிராஜா மாவத்தை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

குருணாகலில் இருந்து மெல்சிறிபுர நோக்கிப் பயணித்த பஸ்ஸில் ஏற முயன்ற வயோதிபர் ஒருவர் தவறி வீழ்ந்து பஸ் சில்லுக்குள் சிக்கிப் படுகாயமடைந்தார்.

அவர் குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கொழும்பு - கல்கிஸ்ஸை பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயதுடைய வயோதிபர் ஆவார்.

இது தொடர்பில் குருணாகல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் இன்று பண்டாரவன்னியன் சிலை முன்பாக ஜனநாயகத் தேசியக் கூட்டணியினர் சத்தியப்பிரமாணம்





வவுனியா, ஜூன் 3

ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் சார்பில் வவுனியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்ட செயலகம் அருகாமையில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் நினைவுச் சிலைக்கு முன்பாக இந்த நிகழ்வு நடைபெற்றது.

ஜனநாயகத் தேசியக் கூட்டணியானது கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் ஐந்து உறுப்பினர்களைப் பெற்றிருந்தது.

அந்தவகையில் வவுனியா மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள பரமேஸ்வரன் கார்த்தீபன், செட்டிகுளம் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள சங்கரன் சசிக்குமார், இராசரத்தினம் லிங்கேஸ்வரன், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள வீரசிங்கம் ஸ்ரீதரன் மற்றும் சதாநந்தம் சுகிர்தன் ஆகியோர் தமது சத்தியப்பிரமாணத்தை மேற்கொண்டனர்.

இந்தச் சத்தியப்பிரமாண நிகழ்வு சிறி தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (சிறிரெலோ) செயலாளர் ப.உதயராசாவின் முன்னிலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.06.2025 வெளியிடப்பெற்றது.